ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 447) Jul (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..4

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog:namperumal.wordpress.com

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 267)

மூன்றுவிதமான ஸ்நாநவிதி நிரூபணம்

96. தஸ்மாத் சதகுணம் மாத்ரம் மந்த்ர அங்கந்யாஸ ஸம்பவம்
தஸ்மாத் சதகுணம் த்யாநம் சுத்த ஸம்விந்மயம் பரம்

பொருள் – ஆகவே, மந்த்ர அங்க நியாஸத்துடன் கூடிய நீராடுதல், அதனைக் காட்டிலும் (கடந்த ச்லோகம்) நூறு மடங்கு உயர்ந்ததாகும். அதனைக் காட்டிலும் நூறு மடங்கு மேன்மையானது, தூய்மையான த்யான ஸ்நாநம் ஆகும்.

97. ஆதௌ ஸாமாந்யவிதிநா ஜல ஸ்நாநம் ஸமாசரேத்
விசேஷவிதிநா பச்சாத் விசேஷஸ்ய விதிஸ்த்வயம்

பொருள் – முதலில் சாதாரண விதிகளின்படி நீரால் ஸ்நானம் செய்யவேண்டும். அதன் பின்னர், சிறப்பு முறையில் ஸ்நானம் செய்யவேண்டும். அந்தச் சிறப்பு முறை பின்வருமாறு உள்ளது.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 412)

6-5-7. அன்னைமீர் அணி மா மயில் சிறுமான் இவள் நம்மைக் கைவலிந்து
என்ன வார்த்தையும் கேட்குறாள் தொலைவில்லி மங்கலம் என்று அல்லால்
முன்னம் நோற்ற விதிகொலோ முகில் வண்ணன் மாயம் கொலோ அவன்
சின்னமும் திருநாமமும் இவள் வாயனகள் திருந்தவே

பொருள் – இவளைப் பெற்று வளர்த்த தாய்மார்களே! அழகான நிறம் கொண்ட மயில் போன்று மிக்க அழகான ரூபம் கொண்டவளாக, சிறிய மான் போன்றுள்ள இந்தச் சிறுபெண்பிள்ளை நம் வசம் விட்டுச் சென்று, "திருத்தொலைவில்லிமங்கலம்" என்பது அல்லாமல் வேறு எந்த ஒரு சொல்லையும் கேட்க விரும்பவில்லை. இது இவள் முன்பு செய்த ஏதேனும் பாக்கியமோ? தாராளத்தை இயல்பாகக் கொண்ட மழை மேகம் போன்ற நிறம் கொண்டவன் செய்த ஆச்சர்யமோ?அவனுடைய அடையாளங்களும் திருநாமங்களும் நன்கு அழகு பெறும்படியாக இவள் வாக்கில் உள்ளன.

அவதாரிகை - அவன் சின்னமும் திருநாமமும், இவள் சொல்லப் புக்கவாறே நிறம் பெற்றன என்கிறாள்.

விளக்கம் – "அவனுடைய அடையாளங்களும் திருநாமங்களும் இவளுடைய வாயில் எப்போதும் உள்ளதன் மூலம், அவை தம்முடைய அழகையும் இயல்பையும் பெற்றன", என்கிறாள்.

வ்யாக்யானம் - (அன்னைமீர்) இவள் பருவம் இது; நமக்கவ்வருகேபோன ஆச்சர்யத்தைப் பாரிகோள். “மைத்ரேய” என்னுமாபோலே “அன்னைமீரெ”ன்கிறாள், ஸந்தோஷத்தாலே. (அணிமாமயில் சிறுமான்) அழகிய நிறத்தையுடைய பெண்பிள்ளை. அழகியதாய் ச்லாக்யமான மயில் போலேயிருக்கிற பெண்பிள்ளை என்னுதல்.

விளக்கம் – (அன்னைமீர்) - இவளுடைய வயது எத்தனை சிறியதாக உள்ளது, ஆயினும் இவள் நம் கைவிட்டுப் போன ஆச்சர்யத்தைப் பார்ப்பீர்களாக! ஸ்ரீவிஷ்ணுபுராணம் போன்றவற்றில் பல இடங்களிலும் “மைத்ரேய” என்று அழைப்பது போன்று இவளும் ஒவ்வொரு பாட்டிலும், மகிழ்வின் காரணமாக, “அன்னைமீர்” என்கிறாள். (அணிமாமயில் சிறுமான்) – இதனை “அணி மாமை இல்” என்று பிரித்தால், “அழகான நிறத்தின் இருப்பிடம்” என்று பொருள் கொள்ளலாம். அல்லது அழகாகவும், கொண்டாடத் தக்கதாகவும் உள்ள மயில் போன்ற பெண்பிள்ளை என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (சிறுமானிவள் நம்மைக் கைவலிந்து) நாம் கற்பித்த திருநாமங்களையும் சொப்பனச் சொல்லமாட்டாதவள் நமக்கு எட்டாதபடியானாள். (கைவலிந்து) கை கடந்து. (என வார்த்தையும் கேட்குறாள்) தன் நினைவை நான் சொல்லிலும் மீட்க நினைத்துச் சொல்லுகிறேனென்று. என் வார்த்தையும் கேட்கத் தவிர்ந்தாள்; திருத்தொலைவில்லிமங்கலமென்னில் நான் சொன்ன வார்த்தையுங் கேட்கும். எனவார்த்தை - என்னுடைய வார்த்தை.

விளக்கம் - (சிறுமான் இவள் நம்மைக் கைவலிந்து) - சிறிய மான் பேடை போன்றுள்ள பெண்பிள்ளை. நான் இவளுக்குக் கற்பித்த திருநாமங்களைக் கூட மழலை முற்றாத காரணத்தால், நன்றாகக் கூற இயலாதபடியானஇவள் இன்று நமக்கு எட்டாதபடி ஆனாள். (கைவலிந்து) - கை நழுவி. (என வார்த்தையும் கேட்குறாள்) - அவளுடைய நினைவுகளை நான் அவளிடம் எடுத்துக் கூற முயன்றாலும், நான் அந்த விஷயத்திலிருந்து அவளை திசை திருப்ப எண்ணுகிறேன் என்பதாக நினைத்து, எனது சொற்களையும் கூடக் கேட்பதற்குத் தவிர்க்கிறாள். அது போன்று எந்த ஒரு சொல்லையும் தோழி கூற, பராங்குச நாயகி கேட்பது இல்லையோ என்றால், அப்படி அல்ல; “திருத்தொலைவில்லிமங்கலம்”

என்று நான் கூறினால் கேட்கிறாள். “என வார்த்தை” என்றால் “என்னுடைய வார்த்தை”.

வ்யாக்யானம் - (முன்னம் நோற்ற விதிகொலோ) ஒக்கப் பிறந்து வளர்ந்தோம், பின்பு இது ஸாதிக்கக் கண்டிலோம். முன்பே பண்ணி வைத்த ஸுக்ருத பலமோ இது! “விதிர் விதாநம்” என்னக்கடவதிறே. இவளாலே யநுஷ்ட்டிதமான தர்மத்துக்கு இத்தனை பலம் கனக்க வுண்டாகமாட்டாது; இது ஸித்த தர்ம பலமாக வேணும்; ஆகையால், (முகில்வண்ணன் மாயங்கொலோ) பிடாத்தை விழவிட்டு வடிவைக் காட்டினானோ? அதில் ஸம்சயம், இத் தலையாலே ஸாதித்ததோர் அசேதந க்ரியைக்கு இத்தனை கனத்த பலமுண்டாகமாட்டாதென்று. இதில் ஸம்சயம், இப்படி இதுக்கு முன்பு ஒரு வ்யக்தியில் பலிக்கக் காணாமையாலே.

விளக்கம் - (முன்னம் நோற்ற விதிகொலோ) “முன்னம் செய்த” என்று ஏன் கூறவேண்டும்? இப்போது செய்த நன்மையான செயல்கள் காரணமாக இருக்கலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; நானும் அவளும் ஒன்றாகவே பிறந்து வளர்ந்தோம். இது போன்று எதனையும் நங்கள் செய்யவில்லை. ஆகவே இவள் தனது முற்பிறவிகளில் செய்த புண்ணியங்களுடைய பலனாகவே இது இருக்கக்கூடும். ஆனால் “விதி” என்றால் புண்ணியத்தைக் குறிக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; “விதி: விதாநம் – விதி மற்றும் விதாநம் என்று புண்ணியம் கூறப்படுகிறது” என்பது காண்க. இவளால் கைக்கொள்ளப்பட்ட தர்மத்திற்கு இந்த அளவிற்கு ஆழமான பலன் ஏற்படாது; ஆகவே இது முன்பே ஏற்பட்டுள்ள பலனாகவே இருக்கவேண்டும். எனவே, (முகில்வண்ணன் மாயங்கொலோ) - “ஈச்வரன்” என்று கூறாமல் “முகில்வண்ணன்” என்று ஏன் கூறவேண்டும்? பச்சை நிறம் கொண்ட வஸ்த்ரம் விழுந்தது போன்றுள்ள தனது வடிவழகை காண்பித்தானோ? “மாயங்கொலோ” என்றால் ஆச்சரியமோ என்று பொருள். “முகில்வண்ணம் மாயமே” என்று தீர்மானிக்கவேண்டும்; அதனை விடுத்து ஏன் ஐயம் கொள்ளவேண்டும் என்பதைக் கூறுகிறார். இவளால் செய்யப்பட்ட புண்ணிய பலனாக, இந்த அளவிற்கு உயர்ந்த பலன் ஏற்படாது என்றால் “முற்பிறவியில் செய்த புண்ணிய பலனோ” என்று ஐயம் கொள்கிறாள். இவ்விதம் எந்த ஒரு வஸ்துவிலும் காணாத காரணத்தால், இதனை “முகில்வண்ணன் மாயமோ” என்று சந்தேகம் கொள்கிறாள்.

வ்யாக்யானம் - (அவன் சின்னமித்யாதி) “தவளவொண் சங்கு சக்கரம்” என்பதான சிஹ்நங்களும், “அரவிந்தலோசநன்”, “தேவபிரான்” என்பதான திருநாமங்களும். (இவள் வாயனகள் திருந்தவே) பண்டே திருந்தியிருக்கிறவை இவள் சொல்லப் புக்கவாறே உயிர் பெற்றிராநின்றன. பட்டர் “அழகியமணவாளப்பெருமாள்” என்றால் திருநாமம் நிறம் பெறுமாபோலேயும், சோமாசியாண்டான் “எம்பெருமானார்” என்றால் திருநாமம் நிறம் பெறுமாபோலேயும், அநந்தாழ்வான் “திருவேங்கடமுடையான்” என்றால் திருநாமம் நிறம் பெறுமாபோலேயும். “யே த்வயா கீர்த்திதா குணா” என்னுமாபோலே.

விளக்கம் – (அவன் சின்னமித்யாதி) - அவனுடைய திருநாமங்களையும் அடையாளங்களையும் இவள் எங்கே கூறினாள் என்பதைக் கூறுகிறார். “தவளவொண் சங்கு சக்கரம்” என்பதாக அடையாளங்களும்; “அரவிந்தலோசநன்” மற்றும் “தேவபிரான்” என்பதாக திருநாமங்களும். (இவள் வாயனகள் திருந்தவே) – “இவள் வாயனகள்” என்பதன் மூலம் “இவள் வாயிலேயானவையாக இருந்து” என்று கூறுகிறார். அவை தங்களுடைய நிறத்தை அடைந்தன. முன்பே அவை அவ்விதம் தங்களுடைய நிலையை அடையவில்லையோ என்பதைக் கூறுகிறார்; முன்பே அவை அவ்விதம் இருந்தபோதிலும், இவளுடைய சொற்களால் கூறப்பட்டவுடன் தங்கள் உயிர் பெற்றன. ஸ்வாமி பராசரபட்டர் “அழகியமணவாளப்பெருமாள்” என்று கூறியவுடன் அந்தத் திருநாமம் தனது இயல்பை அடைவது போன்றும்; சோமாசியாண்டான் “எம்பெருமானார்” என்று கூறியவுடன் அந்தத் திருநாமம் தனது இயல்பை அடைவது போன்றும், அநந்தாழ்வான் “திருவேங்கடமுடையான்” என்று கூறியவுடன் அந்தத் திருநாமம் தனது இயல்பை அடைவது போன்றும், இவளுக்கு ஆயிற்று. இதனை வால்மீகி பகவான் விஷயத்திலும் காணலாம் என்கிறார்; ஸங்க்ஷேப இராமாயணம் (7) - யே த்வயா கீர்த்திதா குணா - எவை உன்னால் கூறப்பட்ட குணங்களோ – என்பது காண்க.

6-5-8. திருந்து வேதமும் வேள்வியும் திருமா மகளிரும் தாம் மலிந்து
இருந்து வாழ் பொருநல் வடகரை வண் தொலைவில்லி மங்கலம்
கருந் தடம் கண்ணி கைதொழுத அந்நாள் தொடங்கி இந் நாள் தொறும்
இருந்து இருந்து அரவிந்தலோசன என்று என்றே நைந்து இரங்குமே

பொருள் – பகவானுடைய ஸ்வரூபம், ரூபம் குணம் மற்றும் விபூதி ஆகிய அனைத்தையும் வெளிப்படுத்துவதில் திருத்தம் கொண்டதான வேதங்களும், அந்த வேதங்கள் வெளிப்படுத்துவதான பகவத் ஆராதன ரூபமாக உள்ள யாகம் போன்ற கர்மங்களும், அத்தகைய வேள்விக்கு ஏற்ற ஸம்பத்துகளைப் பெருக்கியபடி உள்ள மஹாலக்ஷ்மியும் என்பதாக உள்ள அனைத்தும், பகவானுடைய சேர்க்கை காரணமாக மேன்மேலும் வளர்ந்து, அசையாமல் வாழ்கின்ற இடமும், தாமிரபரணியின் வடக்குக் கரையில் உள்ளதும் ஆகிய திருத்தொலைவில்லிமங்கலத்தை, கருமையான கண்கள் கொண்ட இந்தப் பராங்குசநாயகி, தனது கைக்ளைக் குவித்து வணங்கிய அந்த நாள் தொடங்கி, இந்த நாள் முடிய அவனை அடைய இயலாமல் வருந்தி "அரவிந்தலோசனனே" என்று எப்போதும் அழைத்தபடி, தளர்ந்து, தனது உள்ளம் கரைந்து நிற்கிறாள்.

அவதாரிகை - அவ்வூரைத் தொழுத அன்று தொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய சைதில்யத்தைச் சொல்லுகிறாள்.

விளக்கம் – திருத்தொலைவில்லிமங்கலத்தைத் தொழுவதற்குத் தொடங்கிய நாள் முதலாக, இன்றுவரை உண்டான இவளுடைய உருக்குலைந்து நிற்கும் நிலையைக் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (திருந்து வேதமும்) வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரிலுள்ளார் பரிக்ரஹித்த பின்பாயிற்று. ஸ்வரூபம் ஜ்ஞாந மாத்ரமென்கிற ச்ருதிகள், ஜ்ஞாத்ருத்வ ச்ருதிகள், பேதாபேத ச்ருதிகள், ஸகுண ச்ருதிகள், நிர்க்குண ச்ருதிகள் இவையடங்க விஷய விபாகத்தாலே ஒருங்கவிட்டிருக்குமவர்கள்.

விளக்கம் – (திருந்து வேதமும்) - வேதமானது "தான் ஒரு ப்ரமாணம்" என்று நிலைநாட்டப்பட்டது எப்போது என்றால், அந்த ஊரில் உள்ளவர்களால் ஓதப்பட்ட பின்னரே ஆகும். எவ்விதம் அந்த வேதங்கள் உள்ளன என்பதைக் கூறுகிறார். பகவத் ஸ்வரூபமானது ஞானம் மட்டுமே ஆகும் என்பதாகக் காண்பிக்கும் சில ச்ருதிகள்; இவை "ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம:", "விஜ்ஞாநம் ப்ரஹ்ம:" போன்றவை ஆகும். அறிபவனுடைய தன்மையைக் கூறும் ச்ருதிகள்; இவை "ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" போன்றவை ஆகும். வேறுபாட்டைக் கூறும் பேத ச்ருதிகள்;

இவை "த்வா ஸுபர்ணா", "நித்யோ நித்யாநாம்", "பதிம் விச்வஸ்ய" போன்றவை ஆகும். பேதமற்ற நிலையைக் கூறும் அபேத ச்ருதிகள்; இவை "தத் த்வம் அஸி", "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம:" போன்றவை ஆகும். ப்ரஹ்மத்திற்குக் குணம் உண்டு என்பதை கூறும் ஸகுண ச்ருதிகள்; இவை "ஸோச்நுதே ஸர்வாந் காமாந்", "அபஹதபாப்மா" போன்றவை ஆகும். ப்ரஹ்மத்திற்கு குணங்கள் இல்லை என்று கூறும் நிர்குண ச்ருதிகள்; இவை "நிஷ்கலம் நிஷ்க்ரியம்", "நிர்குணம் நிரஜ்ஞனம்" போன்றவை ஆகும். இவை அனைத்தையும், இவற்றால் கூறப்படும் விஷயங்களில் வேறுபாடுகள் இருந்தாலும், அனைத்தையும் ஒருங்கே கையாண்டபடி உள்ளவர்கள்.

வ்யாக்யானம் - (வேள்வியும்) வைதிக ஸமாராதநமும். கற்ற கல்வி அநுஷ்டாந சேஷமாயிருக்கிறபடி. (திருமாமகளிருந்தாம்) ஆராதகருடைய பௌஷ்கல்யம் இருக்கிறபடி. (திருமாமகளிரும்) ஸம்பத்தும். அன்றிக்கே, ஆராத்யரான பிராட்டியும் அவனுமாகவுமாம். தாம் - தான். ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்கள் குறைவற்று வர்த்திக்கிற தேசம்.

விளக்கம் – (வேள்வியும்) – வைதிக ஆராதனைகள். கற்ற கல்வியானது அன்றாட கர்மங்களுக்கு உறுப்பாக இருக்கும் விதம். (திருமாமகளிருந்தாம்) - ஆராதனை செய்பவர்களுடைய நிறைவான நிலை. (திருமாமகளிரும்) - ஸம்பத்தும். அல்லது "திருமாமகளிரும் தாம்" என்பதற்கு வேறு ஒரு பொருள் கொள்கிறார். அதாவது ஆராதிக்கப்படுபவர்களாகிய பெரியபிராட்டியாரும், ஈச்வரனாகிய தானும். வேதமும், வேள்வியும், அந்தணர்களும் குறைவற்று உள்ள இடம். அல்லது வேதமும், ஈச்வரனும், அந்தணர்களும் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (மலிந்திருந்து) பரமபதத்திலுள் வெதுப்போடே போலேயாகாதே இருப்பது. (பொருநல் வடகரை) விரஜைக்கு அக்கரை என்னுமாபோலே. (கருந்தடங் கண்ணி) கண்ணழகுக்கு "அஸிதேக்ஷணை"யோடொக்கும். (தடங் கண்ணி) அவளிற் காட்டில் வ்யாவ்ருத்தி. அவனையநுபவிக்கையால் வந்ததிறே யவளுக்கு; அவளிற் காட்டில் ஏற்றமுண்டிறே, அம்மிதுநத்தை யநுபவிக்கையாலே இவள் கண்ணுக்கு; தொழும் போதும் வடிவழகியராயிருப்பார் தொழவேணுமாகாதே.

விளக்கம் – (மலிந்திருந்து) - பரமபதத்தில் உள்வெதுப்போடு உள்ளது போன்று இல்லாமல் உள்ள நிலை. (பொருநல் வடகரை) - வ்ரஜா நதிக்கு அக்கரை என்பது போன்றுள்ள தாமிரபரணி. (கரும் தடங்கண்ணி) - இவளுடைய கண்ணழகிற்கு இவள் "அஸிதேக்ஷணா - கறுத்த கண்கள் கொண்டவள்" என்று கூறப்படும் ஸீதையுடன் ஒப்புமை கூறலாம்படி உள்ளாள். (தடம் கண்ணி) - ஸீதையைக் காட்டிலும் வேறுபாடு உள்ளது. என்ன காரணம்? இராமனை மட்டுமே அனுபவிப்பதால் ஸீதையுடைய கண்களுக்கு ஏற்றம் வந்தது; ஆனால் இந்தப் பராங்குசநாயகி, இருவரைய்மே அனுபவிப்பதால், ஸீதையுடைய கண்களைக் காட்டிலும் ஏற்றம் ஏற்பட்டது. தொழும்போது வடிவழகு கொண்டவர்களாக உள்ளவர்களை அல்லவோ தொழவேண்டும்? அல்லது வடிவழகு கொண்டவர்கள் அல்லவோ தொழவேண்டும்?

வ்யாக்யானம் - (கை தொழுத அந்நாள் தொடங்கி) திருவடி தொழுத அன்று தொடங்கி இன்றளவும் வர என்னுதல்: தன் ஸத்தையுண்டான அன்று தொடங்கி இன்றளவும் வர என்னுதல். "அஸந்நேவ", "அன்று நான் பிறந்திலேன்", இதிறே முன்புத்தை நிலை. அவன் கையிலுமன்றிக்கே, பிறர் கையிலுமன்றிக்கே தன் கையதாயிருந்தபடி என்தான் தன் ஸத்தை! "தொழுதெழு"விறே.

விளக்கம் – (கை தொழுத அந்நாள் தொடங்கி) - அவ்வூரில் அவனுடைய திருவடி தொழ வந்த நாள் தொடக்கமாக. அதாவது "மயர்வற மதி நலம் பெற்ற" நாள் தொடக்கமாக இன்று முடிய. தைத்திரீயத்தில் - அஸந்நேவ - இல்லாதவன் – என்றும், திருச்சந்தவிருத்தம் (64) - அன்று நான் பிறந்திலேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அல்லவோ முன்புள்ள நிலை இருந்தது? "அன்று நான் பிறந்திலேன்" என்பதன் மூலம், பகவத் விஷயத்தில் ருசி ஏற்படுவதற்கு முன்பு "நான் பிறக்கவில்லை" என்ற நிலையே இருந்தது; அதாவது அறியாமையைக் கொண்ட அஸத் வஸ்து போன்ற நிலை. அவன் கையிலும் இல்லாமல், தன் கையை மட்டுமே நம்பி இருந்த இருப்புதான் என்னே! ஆனால் தொழுவது என்பது இருப்பிற்கான காரணம் ஆகுமோ என்றால், திருவாய்மொழி (1-1-1) - தொழுது எழு – என்பது காண்க.

வ்யாக்யானம் - (இருந்திருந்து அரவிந்தலோசந என்றென்றே) ஒருகால் “அரவிந்தலோசந” என்னும்போது, நடுவே பதின்கால் பட்டைப் பொதி சோறு அவிழ்க்க வேணும். (என்றென்றே) “'தெளர்ப்பல்யத்தாலே சொல்லமாட்டாளோ?” என்றிருக்கச் செய்தே, சொல்லித் தலைக்கட்டா நின்றாள். அவன் அரவிந்தலோசநன்: இவள் கருந்தடங்கண்ணி. இருவரும் ஒரு முகத்திலே காணும் அகப்பட்டது. (நைந்திரங்குமே) சிதிலையாய் அழியா நின்றாள். சரீரத்தளவுமன்றிக்கே, நெஞ்சும் சிதிலமாகாநின்றது. இரக்கம் - ஈடுபாடு.

விளக்கம் – (இருந்திருந்து அரவிந்தலோசந என்றென்றே) - ஒருமுறை இவள் “அரவிந்த லோசந” என்று கூறினால், இவளுக்கு மீண்டும் புத்துணர்ச்சியை உண்டாக்க, பத்து பாக்குபட்டையில் கட்டப்பட்ட சோற்றை அவிழ்க்கவேண்டும். (என்று என்றே) - “ஆனால் வலிமை இன்மையால் கூறமாட்டாளோ” என்று உள்ளபோது, அந்தத் திருநாமத்தை உச்சரித்து முடிக்க இயலாமல் உள்ளாள். அவன் “அரவிந்தலோசநன்”, இவள் “கருந்தடங்கண்ணி”; இருவரும் ஒருவருக்கொருவர் கண்ணழகில் ஈடுபட்டனர் என்றாகிறது. (நைந்து) - உருக்கு உலைந்து.

6-5-9. இரங்கி நாள்தொறும் வாய்வெரீஇ இவள் கண்ண நீர்கள் அலமர
மரங்களும் இரங்கும் வகை மணிவண்ணவோ என்று கூவுமால்
துரங்கம் வாய் பிளந்தான் உறை தொலைவில்லி மங்கலம் என்று தன்
கரங்கள் கூப்பித் தொழும் அவ்வூர்த் திருநாமம் கற்றதன் பின்னையே

பொருள் – இவள் ஒவ்வொரு நாளும் தனது நெஞ்சழிந்து, வாய் வெருவி, கண்ணீரானது பாய்ந்து தேங்கும்படியாக, இங்குள்ள அசேதநமான மரங்களும் கூட இவளுடைய இந்த நிலையைக் கண்டு இரக்கம் கொள்ளும்படியாக “நீல ரத்னம் போன்று காண்பதற்கு இனிமையான வடிவைக் கொண்டவனே!” என்று அவனை அழைத்தபடி உள்ளாள். அது மட்டும் அல்லாமல், குதிரையாக வந்த கேசியின் வாயைப் பிளந்த க்ருஷ்ணன் எப்போதும் வசிக்கும் திருத்தொலைவில்லிமங்கலம் என்ற அந்த ஊரின் திருநாமத்தைக் கற்ற பின்னர், அந்த ஊரை நோக்கித் தனது கைகளைக் குவித்தபடி நிற்கிறாள்.

அவதாரிகை – “இவள் மனோவாக்காயங்கள் முதலிலே தொடங்கி அவன் பக்கலிலே ப்ரவணமாயிற்றின” என்கிறாள்.

விளக்கம் – “இவளுடைய மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகியவை முதலிலேயே அவனிடம் ஈடுபாடு கொண்டன”, என்கிறாள்.

வ்யாக்யானம் - (இரங்கி) நெஞ்சழிந்து. (வாய்வெரீஇ) அடியற்ற பேச்சாயிரா நின்றது. “விசிந்த்ய வாசா ப்ருவதீதமேவ” என்னுமாபோலே மநஸ்ஸஹகாரமின்றிக்கேயிருக்கை. (நாள்தொறும்) “மயர்வற மதிநலமருளப் பெற்ற”வன்றே அறிவு கேடும் குடி புகுந்ததுகாணும். பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநமிறே பெற்றது.

விளக்கம் – (இரங்கி) - நெஞ்சம் உருக்குலைந்து. (வாய்வெரீஇ) - நெஞ்சம் உருக்குலைந்தால் வாயானது வெருவுமோ என்பதற்கு விடை அளிக்கிறார். ஸுந்தரகாண்டம் (32-11) - விசிந்த்ய வாசா ப்ருவதீதமேவ - இராமா இராமா என்று எப்போது அவனையே எண்ணியவளாக, வாக்காலும் உரைத்தபடி உள்ளாள் - என்பது போன்று, மனதின் துணை இன்றி வாக்கு உள்ளது. (நாள்தொறும்) - எப்ப்போது தொடங்கி இந்த இல்லை என்றால், “மயர்வற மதிநலம் அருளப் பெற்ற” நாள் முதலாக, அறிவில் தடுமாற்றமும் ஏற்பட்டது. இவ்விதம் அறிவு தடுமாறக் காரணம் என்ன என்றால், பக்தி ரூபமாக உள்ள ஞானம் அல்லவோ ஏற்பட்டது!

வ்யாக்யானம் - (இவள் கண்ணநீர்களலமர) கண்கள் வாய்வெருவுகிறபடி. நாடொறும் வாய்வெரீஇ யென்றது, “பொய்ந் நின்ற ஞானந்” தொடங்கி இவ்வளவும் வரக் கூப்பிட்ட கூப்பீட்டையிறே. (மரங்களுமிரங்கும் வகை) சேதநாசேதந விபாகமற அழியும்படி காணும், இவள் வாய்விட்டுக் கூப்பிடும்படி. எம்பாரை “மரங்களுமிரங்கக் கூடுமோ?” என்று கேட்க, “இது அருளிச்செய்த அன்று தொடங்கி எத்தனை பாவசுத்தியில்லாதார் வாயிலே புக்கதென்று தெரியாது; இங்ஙனேயிருக்கச் செய்தே, யம நியமாதி க்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கைபோலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சுகளும் இன்று அழிகிறபடி கண்டால், ஸமகாலத்தில் மரங்கள் இரங்கச் சொல்லவேணுமோ?” என்றருளிச் செய்தார். “மரங்கணின்று மது தாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்” என்று அவதாரத்தில் திருக்குழலோசையிற் பட்டதெல்லாம் இவ்வார்த்த நாதத்திலே படுமாயிற்று; “அபிவ்ருக்ஷா: பரிம்லாநா:” என்று, ராம விச்லேஷத்தில்

பட்டதெல்லாம் இவள் பேச்சில் படாநின்றன. பகவத் குணங்களிலும் குணநிஷ்ட்டர் பாசுரமழிக்கும்போலே.

விளக்கம் - (இவள் கண்ணநீர்களலமர) - கண்கள் வாய் வெருவுகின்ற விதமாக. "நாள்தோறு வாய் வெரீஇ" என்றது, திருவிருத்தம் (1) – பொய்ந்நின்ற ஞானம் - என்பது முதல் இந்தப் பாசுரம் முடிய உள்ள அழைப்புகளைளே ஆகும். (மரங்களுமிரங்கும் வகை) – மரங்கள் இவளுடைய நிலையைக் கண்டு இரங்கக்கூடுமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; இவள் தனது வாய் விட்டு அழைக்கும் விதத்தைக் காணும்போது சேதநம் மற்றும் அசேதநம் என்ற வேறுபாடு இல்லாமல் அனைத்தும் இரங்கியபடி நிற்கின்றன. ஸ்வாமி எம்பாரிடம், "மரங்கள் இரக்கம் கொள்ளுமோ?", என்று கேட்டதற்கு அவர், "இந்தப் பாசுரத்தை, ஆழ்வார் அருளிச்செய்த நாள் தொடங்கி, பாவத்தில் சுத்தி இல்லாத எத்தனை மனிதர்களுடைய வாயில் இது புக்கத் தகுந்தது என்று தெரியாது. இப்படி உள்ளபோது, யமம் மற்றும் நியமம் போன்று யோக அங்கங்கள் மூலம் சீர்படுத்த எண்ணினாலும் கூட, சுக்கான் பருக்கை போன்று நெகிழாமல் உள்ள நெஞ்சங்களும் இன்று கலங்குவதைக் காணும்போது, அவள் இருந்த அந்த நாட்களில் இருந்த மரங்கள் இரக்கம் கொண்டன என்பதைக் கூறவும் வேண்டுமோ?", என்றார். மரங்கள் இவ்விதம் நெகிழ்ந்து அழிவதற்கு இரண்டு இடங்கள் கூறுகிறார். பெரியதிருமொழி (3-6-4) - மரங்கணின்று மது தாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும் - என்பதாக க்ருஷ்ணாவதாரத்தின்போது அவனுடைய புல்லாங்குழலினுடைய ஓசையில் அடைந்த நிலைகள் அனைத்தையும், இவளுடைய சொற்களுடைய நாதத்தில் அடைந்தன; அயோத்யாகாண்டம் (59-10) - அபிவ்ருக்ஷா: பரிம்லாநா: - மரங்கள் வாடின – என்பதற்கு ஏற்ப, இராமனைப் பிரிந்த பிரிவில் அடைந்த துன்பங்கள் அனைத்தையும் இவள் பேச்சில் அடைந்தன. பகவானுடைய குணங்களைக் காட்டிலும், அவனுடைய குணங்களில் ஈடுபட்டவர்களுடைய சொற்கள் அழிக்கும் என்பதாகிறது.

வ்யாக்யானம் - (மணிவண்ணவோவென்று கூவுமால்) இவளையோதான் நீங்கள் மீட்கப் பார்க்கிறது! வடிவழகைச் சொல்லியன்றோ கூப்பிடுகிறது. (துரங்கமித்யாதி) பண்டு உபகரித்தவன் இப்போது உபகரிக்கைக்கு வந்திருக்கிற தேசம். கேசி வாயை அநாயாஸேந கிழித்தவன் வர்த்திக்கிற இடம். (தொலைவில்லிமங்கலமென்று தன் கரங்கள் கூப்பித் தொழும்) தன்னூரின் பேரைச்

சொல்ல எல்லாரும் கையெடுக்கும்படி பிறந்தவள் கிடீர் தான் அவனூரைச் சொல்லித் தொழுகிறாள்: இக்கைகண்டார் தொழுமத்தனையென்றுபோலே காணும் இவளிருப்பது. தான் தொழுவது ஸ்த்ரீத்வத்துக்குப் போராதிறே.

விளக்கம் – (மணிவண்ணவோவென்று கூவுமால்) - இப்படிப்பட்டவளையா நீங்கள் மீட்க முயல்கிறீர்கள்? அவனுடைய வடிவழகைக் கூறி அல்லவோ இவள் அழைக்கிறாள். (துரங்கம் இத்யாதி) - முன்பு உபகாரங்கள் பலவும் செய்தவன் இப்போது வந்து உதவும் பொருட்டு வாழ்கின்ற தேசம். கேசியின் வாயை மிகவும் எளிதாகக் கிழிந்தவன் வந்து வாழும் இடம். (தொலைவில்லிமங்கலமென்று தன் கரங்கள் கூப்பித் தொழும்) - தான் பிறந்த ஊரின் பெயரைக் கேட்டால் அனைவரும் கைகூப்பி தொழுவதாக உள்ளபோது, தான் அவனுடைய ஊரின் பெயரைக் கூறத் தொழுகிறாள். இவளுடைய கையழகில் ஈடுபட்டு அவன் இவளைத் தொழுதபடி இருக்கவேண்டியதாக உள்ளபோது, இவள் அவனைத் தொழுதபடி உள்ளாள். இவள் தொழுதால் குற்றமோ என்றால், அவ்விதம் செய்தல் பெண்மைக்கு ஏற்புடையது அல்லவே!

வ்யாக்யானம் - இதுதான் என்று தொடங்கி? என்னில், (அவ்வூர்த் திருநாமம் கற்றதற் பின்னையே) இவள் சொற்கற்ற பின்பு, திருநகரியிலுள்ளார் சொற்கற்பது "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றுபோலே காணும். இவள் பேச்சுக் கற்கையென்றும், திருநாமஞ் சொல்லுகையென்றும் இரண்டில்லை. கோயிலிலுள்ளார் "கோயில்" என்றும், "பெருமாள்" என்றும் கற்குமாபோலே. தோழி, தன் வாயாலே "திருத்தொலைவில்லி மங்கலம்" என்றால் இவள் சொன்ன இனிமை பிறவாமையாலே, அவ்வூரென்கிறாள் காணும். என்தான்! முன்பு சொன்னாளேயென்னில்; அது அப்படியிராமலிறே அவ்வூரென்கிறது.

விளக்கம் – இத்தகைய நிலை எப்போது தொடங்கி உள்ளது? (அவ்வூர்த் திருநாமம் கற்றதற் பின்னையே) - இவள் சொற்களைக் கற்ற பின்னர். ஆனால் இங்கு ஏன் "அவ்வூர்" என்று சிறப்பித்துக் கூறவேண்டும் என்றால், ஆழ்வார்திருநகரியில் உள்ளவர்கள் சொற்களைக் கற்பது "திருத்தொலைவில்லிமங்கலம்" என்பது போன்று ஆகும். ஆனால் சொற்களைக் கற்ற பின்னர் அல்லவோ திருநாமம் கற்கவேண்டும் என்பதற்கு விடை அளிக்கிறார்; இவள் பேசுவதற்குக் கற்றுக்

கொள்ளுதல், திருநாமங்களைக் கற்றுக் கொள்ளுதல் ஆகிய இரண்டும் வெவ்வேறு செயல்கள் இல்லை, இரண்டும் ஒன்றே ஆகிறது. திருவரங்கத்தில் உள்ளவர்கள் “கோயில்” என்றும், “பெருமாள்” என்றும் கற்பது போன்று ஆகும். இங்கு தோழியானவள் “திருத்தொலைவில்லிமங்கலம்” என்று கூறாமல், “அவ்வூர்” என்று ஏன் கூறவேண்டும்? காரணம், தோழியானவள் தனது வாயால் “திருத்தொலைவில்லிமங்கலம்” என்று கூறினால், பராங்குசநாயகி கூறுவது போன்று இனிமையாக இல்லை என்பதால், “அவ்வூர்” என்கிறாள். இது என்ன? முன்பு இவ்விதம் தோழி கூறினாள் அல்லவோ? ஆயினும், இவ்விதம் கூறும்போது இனிமையாக இல்லை என்று உணர்ந்ததால் இப்போது “அவ்வூர்” என்கிறாள்.

6-5-10. பின்னை கொல்நிலமாமகள் கொல் திருமகள் கொல் பிறந்திட்டாள்
என்ன மாயம் கொலோ இவள் நெடுமால் என்றே நின்று கூவுமால்
முன்னி வந்து அவன் நின்று இருந்து உறையும் தொலைவில்லி மங்கலம்
சென்னியால் வணங்கும் அவ் ஊர்த் திருநாமம் கேட்பது சிந்தையே

பொருள் – இவ்விதம் இங்கு பிறந்துள்ள இவள், எல்லையற்ற இனிமை கொண்ட நப்பின்னைப்பிராட்டியோ? பூமியை நிர்வாகம் செய்பவள் என்று கொண்டாடப்படும் பூமாதேவியோ? இவனுக்கே எப்போதும் நிலையான ஸம்பத்தை அளிக்கின்ற மஹாலக்ஷ்மியோ? யார் இவள்? இது என்ன ஆச்சர்யம்! இவள் அவனை “நெடுமால்” என்று அவன் மயங்கும்விதமாகக் கூறி அழைக்கின்றாள். அது மட்டும் அல்லாமல், அத்தகைய மயக்கம் காரணமாக இவளுக்காக அவன் முன்பாகவே வந்து நிற்கும் “திருத்தொலைவில்லிமங்கலம்” என்று அந்த திவ்யதேசத்தைத் தனது தலையால் வணங்குகிறாள். தான் அந்த ஊரின் பெயரை உச்சரிப்பதைக் காட்டிலும் மற்றவர்கள் அந்தப் பெயர் உச்சரிக்கும்போது, அதனைக் கேட்பதையே தனது சிந்தனையாகக் கொண்டுள்ளாள்.

அவதாரிகை - அவனாலல்லது செல்லாத இவளுடைய ப்ராவண்யாதிசயத்தைக் கண்டு, “பிராட்டிமாரிலே யொருத்தியோ?” என்று சங்கிக்கிறாள்.

விளக்கம் - அவனால் அல்லாமல் கடக்க இயலாத இவளுடைய ஈடுபாட்டின் மேன்மையைக் கண்ட தோழி, இந்தப் பராங்குசநாயகி அவனுடைய பிராட்டிமார்களில் ஒருவளாக இருப்பாளோ என்று ஐயம் கொள்கிறாள்.

வ்யாக்யானம் - (பின்னைகொல்) பின்னை பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப்பிராட்டி பிறந்திட்டாளோ? அன்றிக்கே, எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக் கொடுக்கும் பிராட்டி தானே பிறந்திட்டாளோ? ஸர்வேச்வரனுடைய ஸம்புத்தா யிருக்குமவள் பிறந்திட்டாளோ? அஸ்ஸம்பத்து விளையும் பூமியாயிருக்குமவள் பிறந்தாளோ? அவ் விளைபூமியினுடைய பலரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றிக்கே, (பிறந்திட்டாளோ) அவர்களுக்கு இவள்படி யில்லாமையாலே அவர்களொப்பன்று; லோகமெல்லாம் வாழுகைக்கு இவளொருத்தி பிறந்தாளோ! என்றுமாம். "விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே" என்றாற்போலே, நாய்ச்சிமார் பக்கலிலேயும் ஓரோவகைக்கு ஒப்புச் சொல்லலாயிருக்கையாலே கதிர் பொறுக்குகிறாள். "உபமாநமசேஷாணாம் ஸாதூநாம்யஸ் ஸதாபவத்" என்கிறபடியே இவரை எல்லார்க்கும் ஒப்பாகச் சொல்லலாய் இவர்க்கு ஒப்பாவார் ஒருவருமில்லை காணும்.

விளக்கம் – (பின்னைகொல்) - "பிறந்திட்டாள்" என்பதை மூன்று பேர்களிடமும் சேர்க்கவேண்டும். நப்பினை வந்து பிறந்தாளோ? அல்லது ஸ்ரீபூமிப்பிராட்டி வந்து பிறந்தாளோ? அல்லது இவர்களுக்கு இத்தகைய மேன்மையை அளிக்கும் பெரியபிராட்டி வந்து பிறந்தாளோ? ஸர்வேச்வரனுடைய ஸம்பத்தாக உள்ள அவள் வந்து இங்கு பிறந்தாளோ? இந்த ஸம்பத்து இருக்கும் பூமியாக உள்ளவள் வந்து பிறந்தாளோ? அல்லது (பிறந்திட்டாளோ) - அவர்களுக்கு இவளுடைய தன்மைகளும் விதங்களும் இல்லை என்பதால் அவர்கள் இவளுக்கு இப்பில்லை. இந்த லோகம் முழுவதும் வாழ்வதற்காக இந்தப் பராங்குசநாயகி மட்டும் பிறந்தாளோ? ஆனால் முன்பு மூவரையும் இவளுக்கு ஒப்பாக ஏன் கூறினார்? பாலகாண்டம் (1-18) - விஷ்ணுநா ஸத்ருசோ வீர்யே – வீர்யத்தில் விஷ்ணுவை ஒத்தவர் - என்பது போன்று, அந்தந்த பிராட்டிமார்களுடைய ஒவ்வொரு விதத்திற்கும் ஒப்புமை கூறலாம்படி உள்ளதால், கதிரைச் சேகரிப்பது போன்று செய்கிறாள். "ஒவ்வொரு வகைக்கு" என்று ஏன் கூறவேண்டும்? அனைத்துவிதங்களிலும் ஒப்புமை உள்ளதாகக் கூறலாம் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; ஸ்ரீவிபு (1-15-156) - உபமாநமசேஷாணாம் ஸாதூநாம்யஸ்

ஸதாபவத் - அனைத்து ஸாதுக்களுக்கும் உபமானமாக எந்த ஒரு ப்ரஹ்லாதன் உள்ளானோ - என்பதற்கு ஏற்ப, இவளை அனைவருக்கும் ஒப்பாகக் கூறலாம்படியும், இவளுக்கு ஒப்பாக யாரும் இல்லை என்னலாம்படியும் நிலை உள்ளது.

வ்யாக்யானம் - (என்ன மாயங்கொலோ) பகவத்விபூதியில் கூடாததில்லையாகாதோ! இதென்ன ஆச்சர்யந்தான்! (இவள் நெடுமாலென்றே நின்று கூவும்) தன் பிச்சைக் காற்கடைக்கொண்டு, அவன் பிச்சைச் சொல்லிக் கூப்பிடாநின்றாள். (ஆல்) ஆச்சர்யத்திலே, அசை. (முன்னி இத்யாதி) தன்னுடைய வ்யாமோஹத்துக்கு அவன் க்ருஷி பண்ணினபடி. முற்பாடனாய் வந்து அவன் நிற்பதிருப்பதாய்க் கொண்டு நித்யவாஸம் பண்ணுகிறவூர். பசியன், சோறு தாழ்த்தால் படுமாபோலே. (சென்னியால் வணங்கும்) “தன் கரங்கள் கூப்பித் தொழுகையும் ப்ரார்த்யமானபடி. இருந்தவிடத்தேயிருந்து தலைசாய்க்கும்படியானாள். (அவ்வூர் இத்யாதி) அவ்வூர்த் திருநாமங் கேட்கச் செவி தாழ்க்கையிலே இவளுக்கு மநோரதம். இவள், அவ்வூரென்கிறது, பெண்பிள்ளை சொன்னாற்போலேயிராமை. ஆனால் ஒருகால் சொன்னாளே? என்னில், “அது வறைமுறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது” என்றருளிச்செய்வர்.

விளக்கம் - (என்ன மாயங்கொலோ) - இவ்விதம் வேறு யாரையும் ஒப்புமை கூற இயலாதோ? பகவத் விபூதியில் நடக்காதது ஏதும் இல்லை அல்லவோ? இந்த விஷயத்தில் மட்டும் ஒரு மாயமா! (இவள் நெடுமாலென்றே நின்று கூவும்) - தன்னுடைய மயக்கம் மற்றும் புத்தி தடுமாற்றம் ஆகியவற்றைப் புறந்தள்ளி, அவனுடைய அத்தகைய நிலைகளைக் கூறி அழைக்கிறாள். (ஆல்) – வியப்புடன். (முன்னி இத்யாதி) - தான் அவனிடம் மயங்கி நிற்பதற்கு அவனே தேவையான செயல்களைச் செய்தான். இவள் அங்கு வருவதற்கும் முன்பாகவே தான் அங்கு வந்து நிற்பதற்காக, இவள் எப்போது வருவாள் என்பதை அறியாத காரணத்தால், எப்போது வசித்தபடி உள்ள ஊர். பசி எடுத்தவன் சோறு கிட்ட தாமதம் ஏற்பட்டால் தவிப்பது போன்று இவன் நிற்கிறான். “நிற்பது இருப்பதாய்” என்பது காண்க; அதாவது, நிற்பதும் மற்றும் இருப்பதும் ஆகிய இரண்டு நிலைகலையும் ஒரே இடத்தில் செய்தான்; ஆழ்வாரை அனுபவிக்கவேண்டும் என்ற ஆர்வம் முழுவதும் வெளிப்பட்டபடி உள்ள நிலை என்று கருத்து. (சென்னியால் வணங்கும்) - “தன் கரங்கள்” குவித்துத் தொழுவது என்பதும் கூட, சொற்களால் ப்ரார்த்தனை

செய்யும்படி ஆயிற்று; காரணம், கைகளை எடுத்துத் தொழுவதற்கும் கூட இவளுக்கு வலிமை இன்றிப் போயிற்று. தான் உள்ள இடத்திலேயே தலைசாய்த்து மயங்கிக் கிடக்கும்படியாக ஆனாள். (அவ்வூர் இத்யாதி) - அந்த ஊரின் நாமத்தை கேட்கும்போது செவிதாழ்ந்தபடி உள்ளது அலலவோ "இவளுடைய மனதின் விருப்பமாக உள்ளது! தோழியான இவள் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்று கூறாமல் "அவ்வூர்" என்று ஏன் கூறினாள்? காரணம், பாரங்குசநாயகி அந்த ஊரின் பெயரைக் கூறியது போன்று, தான் கூறிய விதம் இல்லை என்பதால் ஆகும். ஆனால் முன்பு தோழியானவள் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்று கூறியுள்ளாள் அல்லவோ என்பதற்கு விடை அளிக்கிறார்; அது ஸாரமாக இல்லை என்பதால், அதன் பின்னர் அவ்விதம் கூறுவதைத் தவிர்த்தாள் என்று கூறுவர்.

6-5-11. சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவ பிரானையே
தந்தை தாய் என்று அடைந்த வண் குருகூரவர் சடகோபன்
முந்தை ஆயிரத்துள் இவை தொலை வில்லி மங்கலத்தைச் சொன்ன
செந்தமிழ்ப் பத்தும் வல்லார் அடிமை செய்வார் திருமாலுக்கே

பொருள் – தனக்கு உயர்ந்த நன்மை அளிக்கும் தன்மையாலும், தனக்கு உயர்ந்த ப்ரியமானவன் என்பதாலும், தேவபிரானையே தனது தந்தையும் தாயும் என்பதாக உறுதி பூண்டு, இந்தத் திருவாய்மொழியில் கூறிய விதத்தில் "சிந்தை, சொல், செயல்" என்பதான மூன்றாலும் அடைந்தவராகவும்; ஸ்ரீமதுரகவியாழ்வார் போன்று "அன்னையாய் அத்தனாய்" என்று நம்மாழ்வாராகிய தன்னைப் பற்றி நிற்பவர்களாகிய ஆழ்வார் திருநகரியில் உள்ளவர்களுக்குத் தலைவராகவும் உள்ள நம்மாழ்வார், பழையதான வேதங்களால் கூறப்படும் ஆழ்பொருளை வெளிப்படுத்துவதாக உள்ள ஆயிரம் திருவாய்மொழிகளில், திருத்தொலைவில்லிமங்கலம் குறித்து அருளிச்செய்தவையும், ஆழ்பொருளை வெளிப்படுத்துவதில் நேர்மை கொண்டவையுமாகிய தமிழான இந்தப் பத்துப் பாசுரங்களையும் நன்கு கற்க வல்லவர்கள், மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேச்வரனுக்கு எப்போதும் கைங்கர்யம் செய்பவர்கள் ஆகிறார்கள்.

அவதாரிகை - நிகமத்தில், இத்திருவாய்மொழியிற் கருத்தை வ்யக்தமாக்கா நின்று கொண்டு, "இத்தைக் கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப் பெறுவர்", என்கிறார்.

விளக்கம் – இறுதியில், "இந்தத் திருவாய்மொழியின் கருத்தை நன்றாக விளக்கிக் கூறும்விதமாக, இதனைக் கற்று, இதற்கு ஏற்றபடியான கைங்கர்யம் செய்யும் நிலையை அடைவர்", என்கிறார்.

வ்யாக்யானம் - (சிந்தையாலும் இத்யாதி) மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன் பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இரங்கி" என்றும், "மணிவண்ணவோ" என்றும், "தன் கரங்கள் கூப்பித் தொழும்" என்றும் மூன்றாலும் இவர்க்குண்டான ப்ராவண்யாதிசயமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று.

விளக்கம் – (சிந்தையாலும் இத்யாதி) - மூன்றுவிதமான கரணங்களுடைய செயல்களைக் கூறி, அதன் மூலம், அந்தந்த கரணங்களை அடையாளம் காண்பிக்கிறார். மனம், வாக்கு, சரீரம் ஆகிய மூன்றும் ஒரே தன்மையில் உள்ளவிதமாக, அவனிடம் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இருத்தல். ஆனால் இவ்விதம் மூன்றாலும் ஈடுபட்டது குறித்து கூறினாரா என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். "இரங்கி" என்றும், "மணிவண்ணவோ" என்றும், "தன் கரங்கள் கூப்பித் தொழும்" என்றும் கூறுவதற்கு ஏற்ப, இந்த மூன்றாலும் இவருக்கு உண்டான ஆழ்ந்த ஈடுபாட்டின் மிகுதி அல்லவோ இந்தத் திருவாமொழியில் கூறப்பட்டது!

வ்யாக்யானம் - (தேவபிரானித்யாதி) அயர்வறுமமரர்ககளுக்கு அதிபதியாயிருந்து வைத்துத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே ஸுலபனாயிருந்தவனே ஸர்வவித பந்துவுமென்று அறுதியிட்டபடியே பற்றுவதும் செய்தவர். (வண்குருகூரவர் சடகோபன்) அவனே யிவர்க்கு ஸர்வவித பந்துவுமானாற்போலே, அவ்வூரிலுள்ளார் ஆழ்வாரையே எல்லாவுறவு முறையாகப் பற்றியாயிற்றிருப்பது. "அன்னையாயத்தனாய் என்னை யாண்டிடும் தன்மையான்" என்றும், "மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ் ஸர்வம்" என்றும் சொல்லுகிறபடியே இருப்பர்கள்.

விளக்கம் – (தேவபிரானித்யாதி) - அயர்வறும் அமரர்களுக்கு அதிபதியாக உள்ளபோதிலும் திருத்தொலைவில்லிமங்கலத்தில் அடைவதற்கு மிகவும் எளிதாக உள்ளவன் ஆகிறான்; அவனே அனைத்துவிதமான உறவினனாகவும் உள்ளான் என்று உறுதியாகக் கூறுவது மட்டும் அல்லாமல், அவனைப் பற்றவும் செய்தார். (வண்குருகூரவர் சடகோபன்) - அவனே இவருக்கு அனைத்துவிதமான

உறவினனாக உள்ளது போன்று, இந்த ஆழ்வாரே அந்த ஊரில் உள்ள அனைவருக்கும் அனைத்துவிதமான உறவினர்களாகவும் உள்ளார். இப்படியாக அவர்கள் இவரை ப்பற்றி நிற்கிறார்கள். இவ்விதம் இருப்பார்களோ என்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; கண்ணிநுண்சிறுத்தாம்பில் "அன்னையாயத்தனாய் என்னை யாண்டிடும் தன்மையான்" என்றும், ஸ்தோத்ரரத்னத்தில் "மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ் ஸர்வம்" என்றும் உள்ளது காண்க.

வ்யாக்யானம் - (முந்தையாயிரம்) பழையதான வேதார்த்தத்தை யருளிச்செய்கையாலே. ஸர்வேச்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாற்போலே, வேதமும் தமிழாய் வந்து இவர் பக்கலிலே அவதரித்தபடி. (செந்தமிழ்) செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக் காட்டுவது. இத்தை அப்யஸிக்கவல்லார் ஸ்ரீய:பதிக்கு அடிமை செய்யப் பெறுவர். பெருமாளும் பிராட்டியும் சேரவிருக்க இளையபெருமாள் அடிமை செய்தாற்போலே, விசிஷ்ட வேஷத்திலே அடிமை செய்யப்பெறுவர்.

விளக்கம் – (முந்தையாயிரம்) - இந்தத் திருவாய்மொழிகளை இவர் இப்போதுதான் அருளிச்செய்கிறார்; இவ்விதம் உள்ளபோது "முந்தைய" என்று ஏன் கூறவேண்டும்? காரணம், பழையதாக உள்ள வேதங்களுடைய ஆழ்பொருளை இதில் அருளிச்செய்ததால் ஆகும். ஸர்வேச்வரன் தனது "ஈச்வரன்" என்ற நிலையிலிருந்து மற்ற பல பிறவிகள் கொண்டு அவதரித்தது போன்று, வேதமும் இவரிடமிருந்து தமிழாய் அவதரித்தது. (செந்தமிழ்) - அழகான தமிழ், பசுந்தமிழ்; அர்த்தங்களை விளக்கமாகக் கூறுதல். இந்தத் திருவாய்மொழியைக் கற்கவல்லவர்கள், மஹாலக்ஷ்மியின் நாயகனுக்குக் கைங்கர்யம் செய்யப் பெறுவர். இராமனும் சீதையும் ஒன்றாக இருந்தபோது, லக்ஷ்மணன் கைங்கர்யம் செய்வது போன்று, சிறந்த ஒரு நிலையில் கைங்கர்யம் செய்யப்பெறுவர்.

திருவாய்மொழி ஆறாம் பத்து ஐந்தாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்